# மட்டக்களப்பு நகரில புதிய உற்சாகம்


Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 9
இதழ் 156

National Tamil Daily — தேசிய தினசரி

ஆடி 1 ரபி ஆகி 8 திங்கட்கிழமை [17-7-67]


## மூன்று நேரமும் தண்ணீர் விநியோகம்

மட்டக்களப்பு, ஞாயிறு மட்டக்களப்பு மாநகர சபை அந்தஸ்து பெற்று அதன் முதல் மேயராக மட்டக்களப்புத் தொகுதி முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரை தெரிவுசெய்யப்பட்டபின்னர் மட்டக்களப்பு நகரிலும் மக்கள்மத்தியிலும் புதிய உற்சாகமும் சுறுசுறுப்பும் தோன்றியுள்ளது. மேயர் திரு. இராசதுரையும் துணைமேயர் ஜனுப் லத்தீப் சின்னலெப்பையும் நகரின் பல பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டு அப்பகுதிகளை முன்னேற்றுவதற்கான திட்டங்களையும் ஆலோசனைகளையும் செய்து வருவதுடன் அப்பகுதி மக்கள் தெரிவிக்கும் குறைகளையும் செவிமடுத்து குறைகளை நீக்க நடவடிக்கை எடுப்பதாக ஆறுதல் கூறிவருவதும் மக்களுக்கு நம்பிக்கையும் உற்சாகமும் அளிப்பதாக இருக்கிறது. பட்டக்க

[6-ம் பக்கம் பார்க்க]

# இன்னும் ஒரு மாதத்தில் யாழ்ப்பாணத்தில் 'லக்ஸல'

## திருநெல்வேலி பொருட்காட்சியில் அரசாங்க அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், திங்.

"யாழ்ப்பாண மாவட்டத்தில் தயாரிக்கப்படும் அதிகமான சிறு கைத்தொழிற் பொருட்களும் விருத்தியடையாமைக்குக் காரணம் அவைகள் விற்பனையாகாது இருப்பதே. இது சம்பந்தமாகப் பலர் என்னைச் சந்தித்து முறையிட்டுள்ளார்கள். யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கும் 'லக்ஸல' விற்பனை நிலையம் இன்னும் ஒருமாத காலத்திற்குள் ஆரம்பிக்கப்பட்டதும் இந்த நிலை ஓரளவுக்கு மாறிவிடும். கிராமங்கள் தோறும் தயாரிக்கப்படும் சிறு கைத்தொழிற் பொருட்கள் இந்த 'லக்ஸல' மூலம் விற்பனைசெய்யப்படும். இதனால் நம் நாட்டுக் கைத்தொழிற் பொருட்களின் உற்பத்தி பெருகுமென்பதில் ஐயமில்லை"

மேற்கண்டவாறு திருநெல்வேலி மாதர் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் தையல் கைப்பணிப் பாடசாலைப் பொருட்காட்சியை நேற்று திறந்துவைத்துப் பேசுகையில் வட மாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தெரிவித்தார்.

கிராம முன்னேற்றச் சிறு கைத்தொழிற் பகுதி உதவி அதிபர் திரு. ச. கந்தவனம் இவ்வைபவத்துக்கு தலைமை தாங்கினார். சங்கத் தலைவி திருமதி நடராசா வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. வேர்ணன் அபயசேகரா மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் லக்ஸல ஆரம்பிக்கப்பட்டதும் இங்கு உற்பத்திசெய்யப்படும் பொருட்கள் இங்கு மாத்திரம் விற்பனையாக மாட்டா. இலங்கையின் பல பாகங்களிலும் விற்பனையாக அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளும். உற்பத்திப் பொருட்கள் தரமானவையாகவும், சிறந்தனவாகவுமிருந்தால் அவைகளை சர்வதேச நாடுகளிலும் விற்பனைசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். நம் நாட்டை வளம்படுத்த இப்படியான மாதர் சங்கங்கள் கிராமங்கள் தோறும் இருக்கவேண்டியது அவசியமாகும். கடந்த 20 வருடங்களிலும் இலங்கையிலுள்ள பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதாகும் அமெரிக்கா, ரஷ்யா இங்கிலாந்து, சுவிட்ஸர்லாந்து, இஸ்ரேல் போன்ற நாட்டிலுள்ள பெண்களைப் பின்பற்றி எமது பெண்களும் முன்வரவேண்டும். சகல இளம் பெண்களும், தங்கள் பெற்றோர்களின் அனுசரணையுடன் சிறு சிறு கைத்தொழில்களில் பொறுப்புணர்ச்சியுடன் ஈடுபட்டால் நமது நாட்டை மற்றைய நாடுகளுடன் தரமான தாக்கலாம் என்பதில் ஐயமில்லை.

விழாவுக்குத் தலைமைதாங்கிய திரு. கந்தவனம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"அரசாங்கத்தின் திட்டத்திற்கிணங்கயாழ்ப்பாண மாவட்டத்தில் 1000நெசவு நிலையங்கள் அமைக்கப்படும். இப்போழுது இதில் அரைவாசிக்கும் மேலானவை நிறுவப்பட்டுவிட்டன. இவற்றுள் ஒன்றையாயினும் ஆண்கள் நடத்தாதது வருந்தத்தக்கதாகும். ஒவ்வொரு நெசவு நிலையங்களிலும் சராசரி 25 இளம்பெண்கள் [illegible] கடமையாற்றுகிறார்கள். இன்னும் சிறிது காலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நெசவு நிலையங்களும் ஓர் ஐக்கிய சங்கமாக்கப்படும். இவற்றிற்கு அந்தந்தப் பகுதியிலுள்ள பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒத்துழைப்பு அவசியமாகும்."

திருமதி வேர்ணன் அபயசேகரா பரிசில்கள் வழங்கினார். செல்வி செந்தில்மணி நடராசா நன்றி தெரிவித்தார். ந. நி.


உ

### அந்தியேஷ்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு

சிவபதம் அடைந்த எமது தாயார் திருமதி வைத்திலிங்கம் செட்டியார் கண்ணம்மாள் அவர்களின் அந்தியேஷ்டி கீரிமலையில் 18-7-67 காலை 5 மணிக்கும் வீட்டுக்கிருத்தியம் இல்லத்தில் காலை 8 மணிக்கும் அபிஷேக ஆராதனை மகேஸ்வர பூஜை அன்னதானம் முதலியன கோவிலில் பகல் 11 மணிக்கும், இல்லத்திலிருந்து நல்லைஞானசம்பந்தர் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் அவர்கள் தலைமையில் பஜனை புறப்பட்டு ஆலய வீதிவலம்வந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் கதாப்பிரசங்கமும் நடைபெற இருக்கிறது. பகல் ஆசிரியர் திரு V. K. ஆறுமுகம் அவர்கள் கோஷ்டியாரின் பஜனையும் மாலை யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்கத்தினரின் பஜனையும் நடைபெறும். அன்பர்கள் சமுகந்தந்து சபையைச் சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

அன்புள்ள
வை. கந்தப்ப செட்டியாரும்
சகோதரர்களும்.

சிவன்கோவில்
வண்ணார்பண்ணை.


### கி. நைஜீரிய முக்கிய நகர் கைப்பற்றப்பட்டது

லாகோஸ், ஜுலை 19

கிழக்கு நைஜீரியாவிலுள்ள பிரதான நகரொன்றைச் சமஷ்டித் துருப்புகள் கைப்பற்றியது உண்மையேயெனக் கிழக்குநைஜீரியாவான பிரா வ்டா ஒப்புக்கொண்டுள்ளது ஆனால், அந்நகர் கைப்பற்றப் படுவதற்குக் காரணம் கிழக்குநைஜீரியாவிலுள்ள சதிகாரரே என [illegible] அறிவித்துள்ளது.

வல்வெட்டித்துறையில்

## சுமுக நிலையை ஏற்படுத்த நடவடிக்கை

### பொலிஸ் உயர் அதிகாரி வாக்குறுதி

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டித்துறையில் இராணுவத்தினருக்கும் சுங்கப் பகுதியினருக்குமிடையே இருந்துவரும் தகராறுகள் சம்பந்தமாகப் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்குச் செய்த புகாரைத் தொடர்ந்து வடபகுதி சட்டவிரோதக் குடியேற்றம், கள்ளக்கடத்தல் பகுதி உதவிப் பொலிஸ் சுப்ரிண்டன் திரு. சேனநாயக்கா, பருத்தித்துறை எம். பி.யை அவரது வாசஸ்தலத்தில் நேற்றுச் சந்தித்துப் பேசினார். வல்வெட்டித்துறையில் தற்பொழுது பொலிஸ், இராணுவம், சுங்கப்பகுதியினருக்கிடையே இருந்துவரும் மனோபாவங்கள் பற்றிய விசாரணைகள் நடைபெற ஏற்ற ஒழுங்குகள் செய்வதாகவும் வருங்காலத்தில் இப்படியான நிலை உருவாகாமல் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் எம். பி.யிடம் கூறியதாகத் தெரிகிறது.

பொலிஸ், இராணுவ, சுங்கப் பகுதியினருக்கிடையே வளர்ந்துவரும் மனக்கசப்பு சிலசந்தர்ப்பங்களில் பொது மக்களைப் பாதிக்கக்கூடுமென உதவிப் பொலிஸ் சுப்ரிண்டனுக்கு எம். பி. சுட்டிக்காட்டியதாகவும் கடந்த ஏப்ரல் மாதம் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற அசம்பாவிதங்களும் இதேபோன்ற சூழ்நிலைகளிலேயேதான் முதலில் ஆரம்பித்ததென்றும் சுட்டிகாட்டப்பட்டதாகவும், வருங்காலத்தில் இப்படியான சம்பவங்களுக்கு இடமளிக்காதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனச் சுப்பிரிண்டன் எம். பி.க்கு வாக்குறுதி அளித்ததாகவும் தெரியவருகிறது.

பத்மினி கொலை வழக்கு

## பல்வேறு பரிசோதனை பற்றி ரசாயனபரிசோதகர்சாட்சியம்

காலி, ஞாயிறு

பத்மினி குலரத்ன கொலை வழக்கில், உதவி அரசாங்க ரசாயன பரிசோதர் திரு. சி. சற்குணனந்தனை பல்வேறு ஆர்சானிக் நஞ்சின் பரிசோதனையின் தேவை பற்றியும், பரிசோதனையின் போது பாவிக்கப்பட்ட சான்றுப்பொருட்களின் அளவுகள் பற்றியும் எதிரிசார்பில் ஆஜரான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், சுமார் 3 மணி நேரம் குறுக்குவிசாரணைசெய்தார்.

இவ்வழக்கு காலி மாஜிஸ்திரேட் திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் காலியைச் சேர்ந்த டாக்டர் டயமன் குலரத்ன [கொலைசெய்யப்பட்ட பத்மினியின் கணவர்] அவரது தாயார் திருமதி லோரா டி. எஸ். குலரத்தின வேலைக்காரர்களான சிசிலின், கோபி, ஆகிய நால்வரும், ஆர்சாச் நஞ்சூட்டி, திருமதி பத்மினி குலரத்தினவை கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ரசாயனப் பரிசோதகர் மேலும் கூறியதாவது: எனக்கு அனுப்பப்பட்ட ஆர்சானிக் உள்ள சான்றுப்பொருட்களை வைத்து வேறு பரிசோதனைகளை நடத்தவில்லை. வெவ்வேறாகப் பரிசோதனை நடத்துவதற்கு வசதிகள் உண்டு. ஆனால் பொருட்களை முற்றாகப் பிரித்துக் கொள்வது பற்றி திடமாக இருக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

'நான்' 'எனது' என்பதை அடியோடு விட்டுவிட்டு எல்லாம் 'நீ' 'உனது' என்ற உணர்ச்சியுடன் கடவுளிடம் பூரண சரணாகதி அடைந்துவிட்டபோது அவர் நமக்கு அவசியமான பலத்தையும் பாதுகாப்பையும் அளித்து சரியான வழியைக் காட்டுவார்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

[illegible] National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

[illegible]பாளம் பிலவங்க ஆடி 1 ௳ 17 7 67

## மாவட்ட சபைகள்

மாவட்டசபைகள் அமைக்கப்படும் என்று அரசாங்கம் திட்டவட்டமாக தெரிவித்துவிட்டது. மாவட்டசபைகளின் அமைப்பு, அவற்றின் அதிகாரங்கள் என்ன? இவை பற்றி இன்னும் தெளிவாக எதுவும் தெரியாது. நகல் மசோதா வெளிவந்த பின்னர்தான் சரியாக அறிந்து கொள்ள முடியும்.

மாவட்டசபைகள் இன்று நேற்றுத் தோன்றிய விஷயமல்ல. 1957-ம் ஆண்டில் பண்டாரநாயகா - செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்தானபோது அந்த ஒப்பந்தத்தில் 'பிரதேச சபைகள்' அமைப்பது என்ற ஓர் அம்சமும் இடம்பெற்றிருந்தது. பிரதேசசபைகளின் அமைப்பு முறையும் அதிகாரங்களும்கூட வெளியிடப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தோன்றி முடிவில் அது கிழித்தெறியப்பட்டது. ஆனாலும் திரு. பண்டாரநாயக்காவின் பின் ஆட்சிக்கு வந்த திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் அரசாங்கம் 'பிரதேசசபைகள்' என்ற பெயரைமாற்றி 'மாவட்ட சபைகள்' அமைக்க ஒப்புக் கொண்டது. திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கங்களிலும் 'மாவட்டசபைகள்' அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டு வந்தது. திரு. டட்லி சேனநாயகாவின் தலைமையில் அமைந்த தேசிய அரசாங்கமும் 'மாவட்ட சபைகள்' அமைப்பது என்று அறிவித்து வந்திருக்கிறது. பிரதேச சபைகளையும் மாவட்டசபைகளையும் எதிர்த்து வந்த யு. என். பியினர் மாவட்டசபைகள் அமைக்க ஒப்புக் கொண்டு அதைத் தங்கள் கொள்கையாகவும் பிரகடனப்படுத்தியுள்ளனர். பிரதேச சபைகளையும் மாவட்டசபைகளையும் தங்கள் கொள்கையாகப் பிரகடனப்படுத்திய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் இன்று அவற்றை எதிர்க்கின்றனர். பிரதேசசபைகள் அல்லது மாவட்ட சபைகள் அமைக்கப்பட வேண்டுமென்பது தமிழரசுக்கட்சியினரின் கொள்கையும் கோரிக்கையுமாகும். சென்ற பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி மாவட்டசபையையும் தங்கள் கொள்கையில் ஒன்றாக வைத்து வாக்குக் கேட்டது. பிரதேசசபைகளையும் மாவட்டசபைகளையும் தமிழ்க் காங்கிரஸ் எதிர்த்து வந்திருக்கிறது; இன்றும் எதிர்க்கிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் அளிக்க ஒப்புக் கொண்டமாவட்ட சபைகளின் அதிகாரங்களைவிடக் குறைவானதும் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளதுமான மாவட்ட சபைகளையோ தாங்கள் அமைக்கப் போவதாகப் பிரதமர் கூறுகிறார். எதிர்க்கட்சியினரின் எதிர்ப்பைச் சமாளிக்க அவர் அப்படித்தான் கூற வேண்டும். அவர் அப்படிச் சொல்வதால் மாவட்டசபைகளே வேண்டாமென்று இப்போதே அவசரப்பட்டு எதிர்க்கலாமா? மாவட்ட சபைகள் சகல அதிகாரங்களுடனும் அமைக்கப்படும் என்று வேறு சிலர் கூறுவதால் இப்போதே அதை ஆதரிக்க வேண்டுமா?

'மாவட்டசபைகள்' என்ற பெயரையே முதன் முதல் கொண்டுவந்த முன்னைய ஆட்சியாளரான இன்றைய எதிர்க் கட்சியினரும் மாவட்ட சபைகளை முன்னர் எதிர்த்த இன்றைய ஆட்சியாளரும் மாவட்ட சபைகள் உண்மையான மக்களாட்சிக்கு வழி வகுக்குமென்றும் பழைய கச்சேரி முறைகள் அந்நிய ஆட்சியின் சின்னம் என்றும் அவற்றை நீக்க வேண்டும் என்றும் கூறியிருக்கின்றனர்.

எதற்கும் மாவட்ட சபைகள் நகல் மசோதா வெளிவரும்வரை பொறுத்திருந்தால் என்ன? தமிழ்ப்பல்கலைக் கழகம், இந்துப் பல்கலைக் கழகம் என்று நமக்குள் நாம் சிண்டுபிடித்துக் கொண்டதன் விளைவு ஒரு பல்கலைக் கழகமாவது கிடைக்கும் வாய்ப்பை இல்லாமல் செய்திருக்கிறது.

மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டால் தமிழ் பேசும் மக்களுக்கே அதிக நன்மை என்பது தமிழரசுக் கட்சியின் கருத்து. 'மாவட்ட சபைகள்' தமிழ் மக்களுக்குத் தீமை என்பது தமிழ்க்காங்கிரஸின் அபிப்பிராயம். அதாவது தமிழரசும், தமிழ்க் காங்கிரசும் தமிழ்ப் பேசும் மக்களின் நலனையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. மாவட்டசபைகள் அமைக்கப்படாவிட்டால் அரசாங்கத்திலிருந்து தமிழரசார் வெளியேறுவார்களாம். மாவட்டசபைகள் அமைக்கப்பட்டால் தமிழ்க்காங்கிரசார் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவராம். தமிழ் பேசும் மக்களின் நலனுக்காக அரசாங்கத்திலிருந்து ஒருவர் வெளியேறித்தானாக வேண்டுமா? தமிழ் மக்களின் பிரதிநிதிகள், தமிழ்மக்களின் நம்பிக்கையைப் பெற்றவர்கள் ஒன்றுசேர்ந்து தமிழ் மக்களின் நலனைப் பாதுகாக்க முடியாதா? தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு தமிழ்மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து பணியாற்ற முடியாதா? ஒரே அரசாங்கத்தில் அங்கம் வகித்துக் கொண்டு வேறுபட்ட கருத்தை வெளியே கூறித்தானாக வேண்டுமா?

தமிழ்பேசும் மக்களும் தலைவர்களும் சிந்திக்க வேண்டும். இனியும் 'கண்ணாமூச்சி' விளையாடுவது சமூகத்துக்கோ, நாட்டுக்கோ நல்லதல்ல.

## யாழ்.மத்தியபஸ்டிப்போவில் டெலிபோன் இல்லாதுகஷ்டம்

யாழ்ப்பாணம், திங்கள் கோண்டாவிலில் உள்ள மத்திய பஸ் டிப்போவிற்கு டெலிபோன் இணைப்பு வசதியில்லாத காரணத்தால் அடிக்கடி பஸ்சேவைகள் சீர்குலைந்து வருவதாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து கோண்டாவிலிலுள்ள மத்திய பஸ் டிப்போவிற்கு டெலிபோனில் பேசமுடியாதபடியினால் பஸ்சேவைகள் தாமதப்படுவதாகவும், பழுதடைந்த பஸ்கள் பற்றி தகவல் கொடுக்கமுடியாமலிருப்பதாகவும் கூறப்படுகிறது,

இதன்காரணமாக பஸ் ஊழியர்கள் எந்தச் சிறு விஷயத்திற்கும் கோண்டாவில் மத்திய பஸ் டிப்போவிற்கு நேரடியாகச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்தகாலத்தில், தூர இடங்களில் பஸ்கள் பழுதடைந்தால், உடனடியாக டெலிபோன் மூலம் அறிவித்துவிடுவார்களென்றும், தற்பொழுது நேரடியாகவே கோண்டாவிலுக்குச்சென்று அறிவிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளதாகவும் தெரியவருகிறது. இதனால் பஸ் சேவை சீர்குலைவதோடு தூர இடங்களுக்கான பஸ்களும், நேரஅட்டவணையின்படி சேவைசெய்ய முடியாமலிருப்பதாகவும் கூறப்படுகிறது.

தென் னிலங்கையிலுள்ள மற்றும் மத்திய டஸ் டிப்போக்களிலிருந்தும், கொழும்பிலிருந்தும், யாழ்ப்பாணம் மத்திய பஸ் டிப்போவிற்கு டெலிபோன்மூலம் நேரடியாகத் தொடர்பு கொள்ளமுடியாமலிருப்பதாகவும் கூறப்படுகிறது. (அ. நி.)

### விலையேற்றத்துக்கு காரணம

கொழும்பு, ஞாயிறு தற்போது ஏற்பட்டுள்ள பொருள்களின் தட்டுப்பாட்டுக்கும்விலையேற்றத்துக்கும் மேற்காசியாவில் ஏற்பட்டுள்ள நிலையோ சூயஸ் கால்வாய் மூடப்பட்டதோ காரணமில்லையெனவும் சில பொருள்களுக்கான இறக்குமதிக் கோட்டா குறைக்கப்பட்டதே காரணமெனவும் பிரபல வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. பம்பாய் வெங்காயம், தகரத்தில் அடைக்கப்பட்டமீன், பட்டர் ஆகியவற்றுக்கு இப்போது கோட்டா குறைக்கப்பட்டுள்ளதே அவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் என்று அவர்கள் கருதுகின்றனர்.

### குருபூசை

மல்லாவி, ஞாயிறு ''இறைவன் முதலடி எடுத்து பாடிக்கொடுக்க பெரிய புராணத்தைச் சேக்கிழார் சுவாமிகள் பாடினார்கள். சேக்கிழார் சுவாமிகளைப் பொறுத்தவரையில் தெய்வ நம்பிக்கை வெற்றி அளித்தது. நாமும் தெய்வ பக்தியுள்ளவர்களாக இருந்தல் தெய்வ அனுக்கிரகம் கிடைக்கும்'' இலங்கைச் சேக்கிழார் மன்ற ஆதரவின் கீழ் மல்லாவி அரசினர்தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசைத்தினத்தையொட்டி நித்தியானந்தா சர்மாவின் கதாப்பிரசங்கத்திற்குத் தலைமை தாங்கிய துணுக்காய் பிரிவுக் காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்து மேற்கண்டவாறு கூறினார்.

### மாத இறுதியில் மந்திரி வருவார்

உடுப்பிட்டி, ஞாயிறு இம்மாதம் 8-ந் திகதி கரவெட்டி வடக்கு, வதிரி உபதபாற்கந்தோரின் புதிய தொலைபேசி இணைப்புச் சேவையை ஆரம்பித்து வைக்கவும், நெல்லியடிப் பொதுச்சந்தை வளவினுள் நிறுவப்பட்டிருக்கும் ''ஓட்டோ எக்சேஞ்ச்'' நிலையத்தை திறந்துவைக்கவும் இங்கு விஜயம்செய்யவிருந்த பொதுமராமத்து தபால் தந்திப் போக்குவரத்து அமைச்சர் திரு மொண்டேகு ஜெயவிக்கிரமா சில தவிர்க்கமுடியாத காரணங்களால் வரமுடியாமற்போனதாகவும் இம்மாத இறுதியில் இங்கு வருவாரெனவும் அறியப்படுகிறது.

### புதிய பாரிஸ்டர்

யாழ்ப்பாணம், திங்கள் திரு. அ. முத்துக்கிருஷ்ணன் இம்மாதம் 18-ம்திகதி லிங்கோன்இன்ஸ் சங்கத்தில் பாரிஸ்டராகப் பதவிப் பிரமாணம் செய்துகொள்கின்றார். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இருந்து 1956-ல் இலங்கைப் பல்கலைக்கழக கலைத்துறையில் சேர்ந்தார். பட்டதாரியானபின் இலங்கை அரசாங்க தொழில் இலாகாவில் இணைந்து தொழில் அதிகாரியாகக் கடமையாற்றினார்.

பின்னர் அப்பதவியிலிருந்து விலகி இங்கிலாந்தில் சட்டம் பயின்றார். 1966 ல் சட்டத்துறையில்சித்தியெய்தினார். இவர் யாழ்ப்பாணம் சிவப்பிரகாசம் வீதியைச் சேர்ந்த காலம்சென்ற திரு. ஆர். எஸ். அருணாசலத்தின் புதல்வராவர். இவர் விரைவில் தாயகம் திரும்புவார்.

### 'திருவள்ளுவர் ஒரு பௌத்தர்'

கொம்பனித்தெரு, ஞாயிறு திருவள்ளுவர் ஒரு பௌத்தர் என்றும், திருக்குறளில் பௌத்த மதக் கொள்கைகளைக் காணக்கூடியதாயிருக்கிறதென்றும் வள்ளுவருக்கு விழா எடுப்பதில் எல்லோரும் பெருமைப்படவேண்டுமென்றும் கொழும்பு இறைவரித்திணைக்கள இலக்கிய மன்றத்தினர் நடத்தியதிரு[illegible] விழாவில் பேசிய திரு சான்ஸ் டி. சில்வா கூறினார். விழாவுக்கு திணைக்கள உதவிக்கமிஷனர் திரு எஸ். ஜே. வேதநாயகம் தலைமை வகித்தார்.

### இன்றைய பலன்

திங்கட்கிழமை

[ஆடிமாதம் 1-ம் திகதி]

நட்சத்திரம்- விசாகம் [பகல் 9-47 வரை]. மேல் அனுஷம்.
திதி-ஏகாதசி இரவு 2-16 வரை.
சுபநேரம்- 12-00-1-00
ராகுகாலம்- 7-30-9-00

மேடம்- சத்துரு கவலை.
ரிஷபம்- குடும்ப சுகம்
மிதுனம்- தொழிலில் சோர்வு.
கடகம்- அதிகார மேன்மை.
சிம்மம்- ஈகை மிகுதி.
கன்னி- எதிர்பாராத வரவு.
துலாம்- அலைமோதும் மனம்.
விருச்சிகம்- உல்லாசப் பயணம்.
தனுசு- இன்சொல் விருத்தி.
மகரம்- காரியதாமதம்.
கும்பம்-வாகனயோகம்.
[illegible]
திருமலி வேலுப்பிள்ளை

### நாட்டிலும் நகரிலும்

தொட்டி தொட்டியாக பாலைக் கொண்டுபோய் கொட்டுகிறார்கள் என்றும் கார்களையும், பெண்களையும் பாலால் கழுவுகிறார்கள் என்றும் சில நாட்களுக்கு முன்பு ஒரு செய்தி வந்ததல்லவா? இந்த திடுக்கிடும் சம்பவம் நியூயோர்க் நகரத்தில் நிகழ்ந்தது. பண்ணைக்காரருக்கும், வியாபாரிகளுக்குமிடையே பாலின் விலை சம்பந்தமாக பிணக்கு ஏற்பட்டுவிளைவாக பண்ணைக்காரர் குறைந்த விலைக்கு விற்பதைவிட அப்படி பாலாபிஷேகம் செய்தார்கள்.

இப்பேர்ப்பட்ட ஒரு கேலிக்கூத்து அமெரிக்காவில் மட்டும்தான் நடக்குமென்று நினைக்காதீர்கள். எமது அருமைத் தாயகமாகிய ஸ்ரீலங்கா த்வீபத்திலும் நடைபெறுகிறது!

போபத்தலாவை என்னுமிடத்தில் அரசாங்கம் நடத்தும் ஒரு கமத்தில் இலங்கையிலேயே மிகப் பெரிய பாற்பண்ணை இருக்கிறது. ஒரு நாளைக்கு 40,50 போத்தல் பால் கறக்கக்கூடிய சிறந்த இனக்கேப்பை பசுக்களும், காளைகளும் அங்கே இருக்கின்றன. இந்த கமத்தில் உற்பத்தியாகும் பாலை இலங்கை பால்சபை வாங்கி பொதுமக்களுக்கு விற்று வருகிறது.

சில சமயங்களில் இக்கமம் 'சப்ளை' செய்யும் பாலில் கொழுப்புத்தன்மை குறைந்துவிடுகிறதாம். எனவே அந்தப் பாலை பாற்சபை வாங்க மறுத்துவிட்டது. கமம் வேறுவழியில்லாமல் அந்தப் பாலை சாக்கடையில் கொட்டிவிடுகிறதாம்!

இப்படி தினமும் சுமார் 3750 போத்தல் பால் பூமாதேவிக்கு அபிஷேகமாகிறது.

இதைப் படித்துவிட்டு இன்னுமொரு செய்தியைப் படித்தவுடன் மண்டை கிறுகிறுக்கிறது. உங்களுக்கு எப்படியிருக்கும், பாருங்கள்!

இதுதான் அந்த மற்ற செய்தி. பால்சபை நட்டத்தில் ஓடுகிறதாம். ஆகையால் அது விற்கும் பாலின் விலையை கூட்டவேண்டுமென்று பாற்சபை கேட்டுக்கொண்டதை அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறதாம்.

போபத்தலாவைகமத்தை நடத்துவது அரசாங்கம். பால்சபை அரசாங்கத்தின் ஆதரவில் இயங்குகிறது. அங்கே பாலை நிலத்தில் ஊற்றுகிறார்கள். இங்கே பால் விலையை உயர்த்துகிறார்கள். இரண்டும் இயங்குவது ஒரேஅமைச்சின் கீழ். அப்படியிருக்கையில் ஏன் இந்த பைத்தியக்காரத்தனம்?

கமத்தில் உற்பத்தியாகும் பாலில் கொழுப்புத்தன்மை குறைவதற்கு காரணம் என்ன? இனிமேல் இல்லையென்ற சிறந்த இனப் பசுக்கள் வளரும் கமத்தில் பாலின் தரம் ஏன் குறைய வேண்டும்? இது ஒருகேள்வி.

சரி, அப்படி கொழுப்புச்சத்துக்குறைந்த பாலை ஏன் கொட்டித் தொலைக்கவேண்டும்? அதைக் குடிப்பதற்கு ஆள் இல்லையா? ஆஸ்பத்திரிகளுக்கு கொடுக்கப்படாதா, அனாதைப்பிள்ளைகளுக்கு அளிக்கப்படாதா? ஏன், இப்படி நிலத்தில் கொட்டவேண்டும்? இது மற்றொரு கேள்வி.

அந்தப் பாலைக் காய்ச்சி வெண்ணெய் எடுக்க முடியாதா? எவ்வளவு கீழ்த்தரமான பாலாய் இருந்தபோதிலும் அதை எவ்விதத்திலும் உபயோகிக்கமுடியாமல் குறுக்கே இருப்பது 'சிவப்பு நாடா' என்ற அர

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூயஸ் கால்வாயில் போர் நிறுத்த உத்தரவு

## ஐ.நா. சமாதானக் கமிஷன் தலைவர் ஜெனரல் புல்லின் கட்டளை

## ஐ. அ. கு. இஸ்ரேல் சம்மதம்

### ஐந்து அரபுத்தலைவர் மாநாடு

நியுயோர்க், ஜூலை 16

**சூயஸ் கால்வாய் பகுதியில் ஒரு நாள் சண்டைக்குப்பின், இஸ்ரேலும் ஐ.அ குடியரசும் போர் நிறுத்தத்துக்குச் சம்மதித்துள்ளன.**

**இப்போர் நிறுத்தம், ஐ நா. சமாதானக் கமிஷன் தலைவர் ஜெனரல் புல்லினால் உத்தரவிடப்பட்டது. நேற்றிரவு இவ்வுத்தரவு அமுலுக்கு வந்தது. இஸ்ரேலும் ஐ. அ. குடியரசும் போர் நிறுத்தத்தை அனுஷ்டித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

ஐ. நா. பொதுக்காரியதரிசி யு தாண்டின் ஆணையின்பேரிலேயே ஜெனரல் புல் போர் நிறுத்தத்துக்கு உத்தரவிட்டார்.

முன்னதாக, இருசாராரும் அனுஷ்டிக்கும் வகையில்ஒரு போர் நிறுத்தத்துக்கு உத்தரவிடும்படி இஸ்ரேல் யுதாண்டிடம் கேட்டிருந்தது.

**ஐ.அ.கு. புகார்**

இஸ்ரேல், ஐ. அ. குடியரசு மீதானஒருபெரியதாக்குதலுக்குமீண்டும் ஆயத்தம் செய்வதாகஐ. அ. குடியரசு, ஐ. நா பந்தோபஸ்து சபைக்குப் புகார் செய்துள்ளது. இஸ்ரேல்மீது தடை உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டுமென்றும் அது சபையைக் கேட்டுள்ளது.

நேற்று இஸ்மேலியாப் பட்டினத்தையும், மற்றும் இடங்களையும் இஸ்ரேல் விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதன் விளைவாக 24 சிவிலியன் மக்கள் கொல்லப்பட்டதாக ஐ. அ. குடியரசு தெரிவித்துள்ளது.

**விமானத் தாக்குதல்**

ஐ.நா பார்வையாளர் ஐ. அ. குடியரசுக்கு வந்திறங்கிச் சில மணித்தியாலங்களுககுள்ளாகவே இஸ்ரேலின் விமானத்தாக்குதல் நடைபெற்றதாகவும், தமது கடமைகளைச் செய்யமுடியாமல்பார்வையாளர்கள்தமது ஹோட்டலுக்குள் பாதுகாப்புக்காக ஓடி ஒதுங்கவேண்டியேற்பட்டதாகவும் ஐ. அ. கு. வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இஸ்மேலியா ரயில்வே நிலையமும் இஸ்ரேல் குண்டு வீச்சுக்கு இலக்காகியது.

**இழப்பும் மறுப்பும்**

நேற்றைய போரில், 16 இஸ்ரேலிய விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாகவும், தமது விமானங்களில் தாம் ஒன்று மட்டுமே இழந்துள்ளதாகவும் ஐ. அ. குடியரசு இராணுவ வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

தனது விமானங்கள் எதுவும் அழிக்கப்பட்டது பற்றி எதுவும் குறிப்பிடாத இஸ்ரேல், 6 ஐ. அ. குடியரசு விமானங்களைத் தனது மானங்கள் சுட்டுவீழ்த்தியதாக மட்டும் அறிவித்துள்ளது.

**ஜோர்தானிலும் சம்பவம்**

இதற்கிடையில், நேற்று ஜோர்தான் ஆற்றின் கிழக்குக் கரையில்இஸ்ரேல்துருப்புகளும் ஜோர்தான் துருப்புகளும் பரஸ்பரம் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாக தெரிகிறது.

ஜோர்தான் துருப்புகளே முதலில் தனது துருப்புகள் மீது இயந்திரத் துப்பாகிகளால் சுட்டதாகவும், பதிலுக்குத் தனதுதுருப்புகளும் சுட்டதாகவும் இஸ்ரேல்கூறியுள்ளது.

**பார்வையாளர் வந்தனர்**

ஐ. நா. பார்வையாளர் கோஷ்டியின் முதற் பிரிவினர் நேற்று கெயிரோ வந்து சேர்ந்தனர். இவர்களில் நான்கு அதிகாரிகளும், மற்றும் 8 பேரும் அடங்கியுள்ளனர். பார்வையாளர்களின் மொத்தத்தொகை 16ஆகும்

**அரபுத்தலைவர் பேச்சுவார்த்தை**

சிரியா, ஈராக், ஐ. அ. குடியரசு, அல்ஜீரியா ஆகிய நாடுகளின் ஜனாதிபதிகளும், நேற்றுகெயிரோ வந்துசேர்ந்த சூடான் பிரதமருமாக ஐந்து அரபுநாட்டுத்தலைவர்கள் மேற்கு ஆசிய விவகாரம்பற்றித் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடாத்தினர். அரபு உச்சி மாநாடு ஒன்று நடாத்துவது பற்றி இந்த ஐந்து தலைவர்களும் ஆலோசித்தனர்.

## அஸ்ஸாம் தனி நாடு?

ஷில்லொங், ஜூலை 16

இங்கு சந்தித்த மலைப்பிரதேசத் தலைவர்கள், அசோக் மேத்தா கமிட்டியில் பங்கு பற்றுவதில்லையென முடிவு செய்துள்ளனர்.

அஸ்ஸாமை சமஷ்டி அடிப்படையில் புனருத்தாரணம் செய்யும்படி மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்துவதெனவும் அல்லது அதற்குப் பதிலாக அஸ்ஸாமை ஒரு தனி நாடாக அமைக்கும்படி கேட்பதெனவும் அவர்கள் தீர்மானித்தனர்.

## ஜோர்தான் மந்திரிசபை ராஜினமா

அம்மான், ஜூலை 16

ஜோர்தான் மந்திரிசபை, மன்னர் ஹுசெயினிடம் ராஜினமா சமர்ப்பித்துள்ளது.

திரு. ஜும்மாவின் தலைமையிலான ஜோர்தான் அரசாங்கம், தற்போதைய நிலைமைக்கேற்ப நாட்டின் அரசாங்கத்தைப் புனருத்தாரணம் செய்வதற்கு மன்னர் ஹுசெயினுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிக்குமுகமாகவே ராஜினமாவைச் சமர்ப்பித்துள்ளது.

தாம் அரசாங்கத்தைப் புனரமைப்பு செய்யும்வரை திரு. ஜும்மாவையே பதவியிலிருக்குமாறு மன்னர் ஹுசெயின் அவரைக் கேட்டுள்ளார்.

## பல்கேரிய இராணுவத் தூதுகோஷ்டி சிரியா வந்தது

டமாஸ்கஸ், ஜூலை 16

பல்கேரிய இராணுவத் தூதுகோஷ்டி ஒன்று டமாஸ்கஸ் வந்துசேர்ந்துள்ளது.

இக்கோஷ்டி, சிரியாத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தும்.

## தமிழ் நாட்டிலிருந்து வரும் செய்திகள்

### டாக்ஸி டிரைவரிடம் கொள்ளை

சென்னை, ஜூலை 16

எட்வின், சேது என்ற இரு நபர்கள் ஒரு டாக்ஸி டிரைவரின் கைக்கடிகாரத்தைக் கொள்ளையடித்ததாகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்விருவர்களும் மவுண்ட் ரோடில் ஒரு டாக்ஸி அமர்த்திக்கொண்டு ஆவடிக்குப் போனார்களாம். வழியில் டாக்ஸி டிரைவரின் கைக்கடிகாரத்தை அபகரித்தனராம். டிரைவர், அவ்வழியில் சென்ற ஓர் அரசாங்க பஸ்ஸைப்பார்த்துக் கூச்சல் போட்டு உதவி கோரினார். கூட்டத்தைக்கண்டதும் எட்வின் என்ற நபர் ஓடிவிட்டாராம். சேது உடனே கைது செய்யப்பட்டார். எட்வினைப்பிறகு பொலிஸார் பிடித்து விட்டனர்.

ஃ ஃ ஃ

### ரயில்வே திருட்டு

திருவள்ளூர், ஜூலை 16

திருவள்ளூரை அடுத்த தின்னனூருக்கருகில் வைக்கப்பட்டிருந்த ரயில் பெட்டிகள், தண்டவாளங்கள் ஆகியவற்றை இரவோடிரவாக லொறியொன்றில் ஏற்றிக்கொண்டிருக்கும்போது, அவ்வழியே வந்த ரயில்வே பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் கொடுத்த தகவல் பேரில் திருவள்ளூர் ரயில்வே பொலிஸார் ஸ்தலத்துக்கு விரைந்து கையும் களவுமாக சாமான்கள் ஏற்றிக்கொண்டிருந்த 4 பேரையும் மற்றும் டிரைவர், கிளீனர் மற்றும் லொறியையும் கைப்பற்றி வழக்குப் பதிவு செய்தனர்.

ஃ

### 132 பேர் கைது

திருச்சி, ஜூலை 16

இங்கிருந்து 14 மைல் தூரத்திலுள்ள லால்குடியில் நேற்றுப் பொலிஸார் 132 பேரைக் கைதுசெய்தனர்.

கூஹுருக்கருகில் ஐயன் கால்வாயில் உள்ள மதகுகளை அத்துமீறித் திறந்துவிட்டு ஆனந்தமேடு, சாத்தமங்கலம், மங்கம்மாள்புரம் முதலிய கிராமங்களிலுள்ள தங்கள் வயல்களுக்குப் பாய்வதற்காகத் தண்ணீரைத் திருப்பிவிட்டனர் என்று கூறப்படுகிறது.

ஃ ஃ ஃ

### கண் ஆஸ்பத்திரியில் திரு. பக்தவத்சலம்

சென்னை, ஜூலை 16

முன்னாள் தமிழக முதல் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் எழும்பூர் கண் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரது இடது கண்ணில் சத்திர சிகிச்சை செய்ய வேண்டியுள்ளது.

### பெண் கொலை கணவன் கைது

திருச்சி, ஜூலை 16

பெரம்பலூர் தாலுகா நன்னை கிராமத்தில் இரு தினங்களுக்கு முன், அழகம்மாள் என்ற 24வயதுப்பெண் கோரமாகக் கொலைசெய்யப்பட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

அவருடைய கணவன் தங்கராஜ் அவளைக் கொலை செய்ததாகச் சொல்லப்படுகிறது. தங்கராஜ் கைது செய்யப்பட்டுள்ளார்.

அழகம்மாளின் உடம்பில் 28 வெட்டுக்காயங்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. கொலை நடந்த இடத்திலிருந்து இரத்தம் தோய்ந்த அரிவாள் ஒன்றைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

பெரம்பலூர் பொலிசார் புலன்விசாரணைசெய்து வருகிறார்கள்.

ஃ ஃ ஃ

### படி அரிசி திட்டம் விஸ்தரிப்பு

சென்னை, ஜூலை 16

சென்னைநகரிலும் கோவை நகரிலும் ரேஷன் கார்டு வைத்துள்ள பொது மக்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கப்படும திட்டம் இம்மாதம் 10-ந்திகதி முதல் இந்த இரு நகரங்களிலும் உள்ள அரசாங்க, தனியார், ஹரிஜன நல இலாகா விடுதிகள், அனாதை விடுதிகள், மருத்துவ மனைகள் ஆகியவற்றுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை சென்னை கீழ்சட்ட சபையில் உணவு மந்திரி திரு. கே. ஏ. மதியழகன் தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

### மதுரையில் வள்ளுவர் விழா

மதுரை, ஜூலை 16

மதுரை திருவள்ளுவர் கழகத்தின் 5 தின வெள்ளி விழாக் கொண்டாட்டம் ஸ்ரீ மீனாட்சி கோவில் வடக்கு ஆடி வீதியில் பாண்டிச்சேரி தலைமை நீதிபதி திரு. எஸ். மகராஜப்பிள்ளை தலைமையில் தொடங்கியது.

இவ்விழாவிற்குத் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் குறள் அன்பர்களும் தமிழ்ப்பெரியார்களும் வந்திருந்தனர்.

கிரிக்கெட்

### 3-வது டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி

எட்ஜ்பஸ்டன், ஜூலை 16

இங்கு நேற்று நடந்து முடிந்த மூன்றாவதும் கடைசியுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில், இங்கிலாந்து இந்தியாவை 132 ஓட்டங்களால் தோற்கடித்தது. மூன்று 'டெஸ்ட்' போட்டிகளிலும் இங்கிலாந்தே வெற்றி ஈட்டியது.

எட்ஜ்பஸ்டன் 'டெஸ்ட்' ஓட்டப் புள்ளிவிபரம் பின்வருமாறு

**இங்கிலாந்து**

முதல் இன்னிங்ஸ் 298; இரண்டாவது இன்னிங்ஸ் 203.

**இந்தியா**

முதல் இன்னிங்ஸ் 92[illegible] இரண்டாவது இன்னிங்ஸ் 277.

## பவநகரில் ஆர்ப்பாட்டம்

### பொலீசார் பலதடவை கண்ணீர்ப்புகை பிரயோகம்

பவநகர், ஜூலை 16

சௌராஷ்டிர பல்கலைக் கழகத்தை ராஜ்கோட்டில் நிறுவுவதை ஆட்சேபித்து நேற்று நாள் முழுவதும் பவநகரில் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன.

ஆர்ப்பாட்டக்காரர்கடைகளைச் சூறையாடினர். தெரு விளக்குகளையும், தந்திக்கம்பங்களையும் அடித்து உடைத்தனர். கற்கள் வீசிப் பொலிசாரைத் தாக்கினர்.

கூட்டத்தினரைக்கலைக்கப் பொலிசார் பல தடவை கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். 19 பேர் காயமுற்றதாகவும், இவர்களில் 8 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**தடை உத்தரவு**

நான்கு பேருக்குமேல் கூட்டம் கூடுவது. சுலோகங்கள் கோஷமிடுவது, ஆயுதங்கள் கொண்டு செல்வது ஆகியனவற்றுக்குப் பொலிசார் தடை விதித்துள்ளனர்.

**சூட்டுச் சம்பவம்**

நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவமொன்றில், ஒருவர் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இச்சம்பவம் பவநகர் ஜில்லாவில் மஹுவா என்ற நகரில் 1,500 பேர் கொண்டகூட்டமொன்றைக் கலைப்பதற்காகப் பொலிசார் சுட்டபோது நடைபெற்றது.

**விசாரணை**

பொலிஸ் சுட்டதுகுறித்து நீதி விசாரணை [illegible] குஜராத் அரசா[illegible] செய்துள்ளது.

## அரபு பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல்வாபஸாகவேண்டும்

### துருக்கி-டுனீசிய வெளியுறவு மந்திரிகள் கூட்டறிக்கை

அங்காரா, ஜூலை 16

துருக்கிக்கு வந்துள்ள டுனிசிய வெளியுறவு மந்திரிக்கும் துருக்கி வெளியுறவு மந்திரிக்குமிடையே இங்கு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் இறுதியில் ஒரு கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. [illegible] போரில் இஸ்ரேல் கைப்பற்றிய அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் உடனடியாக வாபஸ்பெறவேண்டுமென்று இரு நாட்டு வெளியுறவு மந்திரிகளும் இக்கூட்டறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

சைப்பிரஸ் விவகாரத்தில், டுனிசியா துருக்கிக்குஆதரவு அளிப்பதாகவும் அக்கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கப்பூருக்கும் சென்னைக்கும்

சென்று திருமபும் விமான டிக்கட்டுகளைப் பரிசாகப் பெறுங்கள். [அல்லது அதன் பெறுமதியான பணம்]

**அத்துடன் 10 ஆறுதல் பரிசுகள்**

முழு விபரங்களுக்கு கீழே கொடுக்கப்பட்டிருப்பதை வாசித்து தங்களுடைய பிரவேசங்களை இன்றே அனுப்பிவையுங்கள்.

சாளி! நான் கேட்டது இதுவல்ல!
ஜின் என்று சொல்லும் போது நான் கேட்பது —



## மெஸ்தியா ஜின்னையே

ஏனென்றுல் ......??

1. புதிய மெஸ்தியா ஜின் இரு முறை வடிக்கப்பட்டது.
2. புதிய மெஸ்தியா ஜின் வெற்றி கண்டதோர் விசேஷ வெளிநாட்டு முறைப்படி தயாரிக்கப்படுவது.
3. புதிய மெஸ்தியா ஜின் மிகப் புதுமையான பிரெஞ்சு யந்திரங்களால் செய்யப்படுவது.
4. புதிய மெஸ்தியா ஜின்கள் [கலப்பற்றதும், தோடம் பழ ரஸம் கலந்ததும்] மென்மையானவை — வெண்பட்டும் மஞ்சள் ஊதாவும் — ஆ! அதுதான்!
5. புதிய மெஸ்தியா ஜின்தான் 'கொக்டெயில்' பானத்துக்கு சிறந்த அஸ்திவாரம். அதுமட்டுமல்ல, சாளி நீ நினைக்கமுடியாத 'கொக்டெயில்' எல்லாவற்றையும் அது உருவாக்கும்.
6. புதிய மெஸ்தியா ஜின் ரொம்ப ரொம்ப சுத்தமானது—வெறி அம்மல் என்பதே கிடையாது. ஆனபடியால் தான், மேனே சாளி, நான் ஜின் என்ற சொல்லும் போது:

### புதிய மெஸ்தியா ஜின்னையே குறிப்பிடுகிறேன்

இங்கே காணப்படும் நமது நண்பர் உண்மையிலேயேரசித்து மதுவை அருந்துபவர். புதிய மெஸ்தியா ஜின்னை தாம் விரும்புவதற்கு ஆறு காரணங்கள் கூறியிருக்கிறுர். நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:— புதிய மெஸ்தியா ஜின்னை நீங்கள் விரும்புவதற்கு உங்களுடைய சொந்த காரணம் என்னவென்பதைஎழுதி புதிய மெஸ்தியா ஜின் போத்தல் லேபல் ஒன்றுடன் புதிய மெஸ்தியா போட்டி மே/பா. விஷன் விளம்பரங்கள் லிமிடெட்' 3-வது மாடி, மாக்கான்மரைக்காயர் கட்டிடம், கொழும்பு—1 என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

எத்தனை சீட்டுகளாவது அனுப்பலாம். ஆனுல் ஒவ்வொரு சீட்டோடும் ஒருபுதியமெஸ்தியா ஜின் லேபல் சேர்க்கப்படவேண்டும். **பன்னிரண்டு பரிசுகள் கொடுக்கப்படும். முதலாவது பரிசு சிங்கப்பூருக்குப் போய்வர ஓர் இலவச விமானடிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு. மிகக் கூடுதலான சீட்டுகள் அனுப்புபவருக்கு சென்னைக்குப் போய்வர ஓர் இலவச விமான டிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு.** ஒரு விசேஷ நீதிபதி குழுவின் தீர்ப்பே முடிவானது. ஸ்ரீலங்கா டிஸ்ரிலறீஸ் லிமிடெட், விஷன் விளம்பரங்கள் லிமிடெட் ஆகிய ஸ்தாபனங்களில் வேலை செய்வோரும் அவர்களுடைய குடும்பத்தினரும் இந்தப் போட்டியில் பங்குபற்றலாகாது. போட்டி முடிவு திகதி ஜூலை 31, 1967.

நான் மெஸ்தியா ஜின்னை விரும்புவதற்கு காரணம் ........................

பெயர்: ........................

விலாசம்: ........................

நான் இத்துடன் ................ கூப்பனும்/கூப்பன்களும் ................ லேபலும்/லேபல்களும் இணைக்கிறேன்.


## இடமாற்றம்

காரைநகர், சனி

காரைநகர் கிராமசபையில் பல வருடங்களாக பிரதம லிகிதராக கடமையாற்றிய திரு. எஸ். குமாரசாமி, இம்மாதம் 15-ம் திகதியில இருந்து நீர்வேலிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## 6வது ஆண்டுவிழா

உடுப்பிட்டி, ஞாயிறு

கரவெட்டி மேற்கு மத்தொனி திருவள்ளுவர் சனசமூக நிலைய 6-வது ஆண்டுவிழா இன்று திங்கட்கிழமை மாலை முங்கோடை கந்தசுவாமி கோவில் முன்றலில் நடைபெறவிருக்கிறது.

திரு. எம். சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், வடமாகாண அரசாங்கஅதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா, வடமராட்சி காரியாதிகாரி திரு. விஸ்வநாதன் பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வி. செல்லையா, முன்னுள் செனட்டர் திரு. ஜி நல்லையா ஆகியோர் முக்கிய பேச்சாளர்களாககலந்துகொள்வர்.

'கரவை கலைமன்ற' த்தினரின் நாடகம், 'நாமகள்' கோஷ்டியினரின் கிராமிய நடனம்என்பன கலைநிகழ்ச்சிகளாக இடம்பெறவிருக்கின்றன.

வள்ளுவர் விழாவில் பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி வேர்ணன் அபயசேகரா பரிசில்கள் வழங்குவார்.

## "ஆசிரிய சங்கங்கள் மாணவர் நன்மைக்குப் பாடுபடுவதே நல்லது"

### ஆசிரியர் சங்க விளையாட்டுப் போட்டியில் மனநோய் சிகிச்சை நிபுணர் பேச்சு

உடுப்பிட்டி, ஞாயிறு

"இன்று நாட்டிலே மனநோய் அதிகரித்து வருவதற்கு மக்களின் தப்பபிப்பிராயமும் மூடநம்பிக்கையுமே காரணமாகும். மனநோயில் இருபது வகைகள் உள்ளன. இவற்றில் ஒருசிலவற்றையே இலகுவில் மாற்ற முடியாமலுள்ளது மந்திகையில் மனநோய் சிகிச்சை நிலையம் நிறுவி ஒரு வருட காலத்தில் 1500 நோயாளிகள் சிகிச்சை பெற்று 1000 பேர் பூரண சுகமடைந்தனர். 200 பேர் சுகமடைந்து வருகின்றனர் 300 பேர் சுகமடைய முடியாதவர்களாக இருக்கின்றனர். மனநோயின்றி விமோசனம் பெற வேண்டுமாயின் ஒவ்வொருவரும் கவலையை விட்டொழிக்கப்பழக வேண்டும். கடின உழைப்பும், ஆறுதலும் எமக்கு அவசியம். மாணவர்கள் பைத்தியங்களின் பரிதாபநிலையை உணராது நையாண்டி செய்வது அவர்களுடைய வீட்டிலுள்ள நோயாளியைக் கேலி செய்வதற்கொப்பாகும்" என்று வடபகுதி மனநோய் சிகிச்சை நிபுணரும், மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி மனநோய் சிகிச்சைநிலைய பொறுப்பதிகாரியுமான டாக்டர் திரு. ரீ. அருளம்பலம் நேற்றுமாலை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற வடமராட்சி ஆசிரியர் சங்கத்தின் வடமராட்சி பாடசாலை கட்கிடையேயான விளையாட்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையில் கூறினுர்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"தொழிற் சங்கங்களைப் போல் அனுவசிய போராட்டங்களில் ஈடுபடாமல் இத்தகைய ஆசிரிய சங்கங்கள் மாணவர்களின் நன்மைக்காகப் பாடுபடுவது வரவேற்கத்தக்கது. ஆசிரியர்களுடைய சேவை மகத்தானது. புதிய சமுதாயத்தை நல்லமுறையில் உருவாக்கும் வல்லமை ஆசிரியர்களிடமே தங்கியுள்ளது. இன்றைய மாணவர்களே வருங்காலத்தில் விஞ்ஞானிகளாகவும் தலைவர்களாகவும், கலைஞர்களாகவும் உயர்ந்த நிலைக்கு வருகின்றனர். ஆசிரியர்கள் விடா முயற்சியையும், பழக்க வழக்கங்களையும் எமக்கூட்டுகிறுர்கள். இறைவன் எம்மைப் படைத்ததுபோல, எம்மைச் சிறந்தவர்களாகப் படைக்கும் ஆசிரியரும் இறைவனுக்குச் சமமான

[5ம் பக்கம் பார்க்க]





லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர், மேற்கு ஐரோப்பாவின் மிகப்பெரிய அதி பிரசித்த பால் தயாரிப்புத் தொழிற்சாலையிலிருந்து வருகிறது. ஹாலந்தின் அதிகபட்ச அபிமானம் மிகுந்த இதில் 28 சத விகிதம் பாற் கொழுப்பும் 26.7 சத விகிதம் புரதச் சத்தும் உண்டு.

லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர், உண்மையான முதற்றர பூரண ஆடைப்பால் தர வேண்டிய அனைத்தையும் தருகிறது; இருந்தும், வேறெந்த ரகப் பவுடரையும் விடக் குறைவான நியாய விலையில் உங்களுக்குக் கிடைக்கிறது.

ஏக விநியோகஸ்தர்கள்

# மில்லர்ஸ்

லிமிட்டெட்.

GRANT-4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்


### நகை ஏல விற்பனை

மன்னூர்

மன்னூர் மெயின் ரோட்டில் அடைவுபிடிக்கும் வீ. க. முருகேசு அன் கோவிடம் 31 - 3 - 1966 -க்கு முன் அடைவுவைத்து மீட்காத நகைகளை 1967-ம் ஆண்டு ஆடிமாதம் 23-ம் திகதி [23-7-67] ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் மேற்படி கம்பனியிலிருந்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

S. இரத்தினசபாபதி
2389 ஏலதார்.


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 17 - 7 - 67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை- கே. நாராயணபிள்ளை, 6-45 கிறிஸ்தவ நற்சிந்தனை பி. சவரிமுத்து, 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல் வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல்12-00சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு 6-15 பாட்டு— ஏ. சுந்தரம், 6-45 கிராம சஞ்சிகை, 7-15 விவேகச் சக்கரம், 7-45 தமிழ் மூலம் சிங்களம்—என். டி. பீரிஸ், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்விருப்பம்.

### கருத்தரங்கம

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

பொதுத்தராதர கல்வி (சாதாரண) பரீட்சைக்குரிய தமிழ்மொழி கற்பித்தல் பற்றிய கருத்தரங்கு ஆவணி 2-ம், 3-ம் திகதிகளில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

வலிகாமம் மேற்கு

# கயரோக நிவாரண போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வலிகாமம் மேற்கு கயரோக நிவாரண தேசிய சங்கத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடைபெற்ற போட்டி முடிவுகள் வருமாறு:

### சங்கங்கள்

சித்திரப்போட்டி: செல்வி கோமதி கந்தையா, தொல்புரம் மத்திய சனசமூக நிலையம். செல்வி மற்றில்டா நிக்கிலாப்பிள்ளை, சில்லாலை மாதர் கி. மு. சங்கம். செல்வி கில்டா நிக்கிலாப்பிள்ளை, சில்லாலை நல்லாயன் சனசமூக நிலையம்.

கொடிப் போட்டி: திருமதி புஷ்பம் செல்வரத்தினம், சில்லாலை மாதர் கி. மு. சங்கம்.

சுலோக அட்டை எழுதிய போட்டி: திருமதி புஷ்பம் செல்வரத்தினம், சில்லாலை மாதர் கி. மு. சங்கம், செல்வி கோமதி கந்தையா, தொல்புரம் மத்திய சனசமூக நிலையம். திரு. கே. அலோசியஸ், சில்லாலை இளைஞர் மன்றம். செல்வி திரேசம்மா நிக்கிலாப்பிள்ளை சில்லாலை மாதர் கி. மு. சங்கம்.

கீதம் பாடும் போட்டி: சில்லாலை இளைஞர் மன்றம்.

நாடகப் போட்டி: சில்லாலை இளைஞர் மன்றம், நவாலி வாலிப கிறிஸ்தவ சங்கம், பண்டத்தரிப்பு சனசமூக நிலையம்.

### பாடசாலைகள்

சித்திரப் போட்டி: செல்வி லலிதா நிக்கிலாப்பிள்ளை, இளவாலை திருக்குடும்ப கன்னியர்மட ஆங்கிலப் பாடசாலை செல்வன் எஸ். ஏ. லிங்கேஸ்வரன், நவாலி மகாவித்தியாலயம். செல்வி ஸ்ரெலா இராசையா, இளவாலை திருக்குடும்ப கன்னியர்மட ஆங்கில பாடசாலை.

கொடிப்போட்டி: செல்வி இ. பிரான்சிஸ்கா, சென். தோமஸ் ரோ. க. பாடசாலை மாதகல். செல்வி வி. இராஜேஸ்வரி, சென் தோமஸ் ரோ. க. பாடசாலை மாதகல். செல்வி ஏ. மேரி ரோசரியோ நிர்மலா சென் தோமஸ் ரோ.க. பாடசாலை மாதகல். செல்வி ரி. மரிஸ்ரெலா கிரேஸ், சென் தோமஸ் ரோ. க. பாடசாலை மாதகல்.

சுலோக அட்டை எழுதிய போட்டி: செல்வி எம். அம்லோற்பவ கிறேஸ், சென். தோமஸ் ரோ.க. பாடசாலை மாதகல். செல்வி ஏ. மேரி ரோசாரியோ ஜெயநிர்மலா சென் தோமஸ் ரோ. க. பாடசாலை மாதகல். செல்வி இ. கமலாதேவி, சென் தோமஸ் ரோ.க. பாடசாலை மாதகல். செல்வி பற்றிமா ஞானேஸ்வரி சந்தியாப்பிள்ளை, இளவாலை திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலை.

கீதம் பாடும் போட்டி: இளவாலை அர்ச் ஹென்றியரசர் கல்லூரி. மானிப்பாய் மகளிர் கல்லூரி, சில்லாலை ரோ. க. பெண்கள் பாடசாலை. யாழ்ப்பாணக் கல்லூரி.

நாடகப் போட்டி: இளவாலை அர்ச் ஹென்றியரசர் கல்லூரி. இளவாலை கன்னியர் மடம் ஆங்கில பாடசாலை. மானிப்பாய் மகளிர் கல்லூரி.

## கந்தசாமி இல்லத்திற்கு முதலிடம்

குரும்பசிட்டி, ஞாயிறு

குரும்பசிட்டி உதயதாரகை இளைஞர் சங்கவருடாந்த இல்லங்களின் விளையாட்டுப்போட்டியில் கந்தசாமி இல்லம் முதலிடத்தைப்பெற்றுக் கொண்டது.

மூன்று இல்லங்களுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டியில் சுப்பிரமணியம் இல்லம் திருநாவுக்கரசு இல்லம் முறையே இரண்டாம் மூன்றும்ஸ்தானங்களைபெற்றன

சங்கானை, ஞாயிறு

சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழகத்திற்கும் கந்தரோடை ஜெக்கட் விளையாட்டுக்கழகத்திற்கும் நடைபெற்ற சினேகபூர்வமான தாச்சிவிளையாட்டுப் போட்டியில் நாவலர் விளையாட்டுக்கழகம் 8 பழங்களால்வெற்றியீட்டியது.

மத்தியஸ்தராக திரு. சி. தியாகராசா கடமையாற்றினர்.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
Daily 4-45, 7-00, 9-45
FROM BEIRUT WITH LOVE
With Frederic Stafford
As Secret Agent 505

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.
கே. ஆர். விஜயா
நடித்த
பணம் படைத்தவன்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
மனோகர் — பண்டரிபாய்
நடித்த
புனிதவதி

REGAL JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Jane Fonda
in
CIRCLE OF LOVE


## மகாஜனு வெற்றி

யாழ்ப்பாணம், சனி

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சிங்கள மத்திய மகாவித்தியாலயத்துக்கு மிடையில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி 14—1, 14—2, என்ற எண்ணிக்கையில் சிங்கள மத்திய மகாவித்தியாலயத்தைத் தோற்கடித்தது. மகாஜனக் கோஷ்டியின் காப்டனின் விளையாட்டு பாராட்டக்கூடிய விதத்தில் இருந்தது.

இப்போட்டி சிங்கள மத்தியமகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

## பண்டத்தரிப்பு மகளிருக்கு வெற்றி

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி கோஷ்டியினருக்கும் காரைநகர் யாழ் கல்லூரி கோஷ்டியினருக்கு மிடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியினர் அமோகவெ வெற்றிபெற்றனர். பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியினர் 24 கோல்களையும் காரைநகர் யாழ் டன் கல்லூரியினர் 3கோல்களையும் பெற்றனர். இச்சுற்றுப் போட்டிக்கு திருமதி ப. குகதாசன் செல்வி. எஸ். கணபதிப்பிள்ளை ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

## சாரம் திருடினுராம்: எதிரிக்குச்சிறை

சாவகச்சேரி, ஞாயிறு

இவ்வருடம் மே மாதம் திகதி கிளிநொச்சி நீர்ப்பாசனஇலாகாவைச்சேர்ந்த கே. குணதாசா என்பவருடைய அறையினுள் சென்று 8ரூபா பெறுமதியான சாரம் ஒன்றைத் திருடியதாகவல்லிகனகன்என்பவர்மீது குற்றம் சாட்டிக் கிளிநொச்சிப் பொலிசாரால் தாக்கல்செய்ப்பட்ட வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு முதல் குற்றச்சாட்டிற்கு மூன்றுமாதச் சிறைத் தண்டனையும் இரண்டாம் குற்றச்சாட்டிற்கு மூன்று மாதச் சிறைத் தண்டனையும் விதித்து இரு தண்டனைகளையும் ஒரே காலத்தில் அனுபவிக்கும் படி உத்தரவிட்டார். இவர் முன்பும் 4 தடவைகள் குற்றப்பட்டவரெனத் தெரிவிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை, ஞாயிறு

தொண்டமானுறு செல்வச் சந்நிதி ஆனந்தாச்சிரமத்தில் மாணிக்கவாசகர் குருபூசை வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பூசைமுடிவில் அன்னதானமும் வழங்கப்பட்டது.

## ''ஆசிரியசங்கங்கள் ....

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

வரேயாவார். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி தோல்வியைப் பொருட்படுத்தக் கூடாது. விளையாட்டு மைதானத்தில் சகிப்புத்தன்மை, ஊக்கம் முதலிய பாடங்களைப் பயிலுகிறோம்.''

போட்டிகளில் வெற்றியீட்டியவர்க்கு வடமராட்சி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருயுதி எம். அருளம்பலம் பரிசில்களை வழங்கினர். உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வி. செல்லையா, முன்னள் உதவி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. வி. கே. ஆறுமுகம் ஆகியோர் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர். செயலாளர் ஆசிரியர் திரு. டபிள்யூ. ஆர். அருளையா நன்றி கூறினர்.

## வரிவிளம்பரம்


### விற்பனைக்கு

தென்னந்தோட்டம்:

20 ஏக்கர்கொண்டதுண்டுகளாகவோ, அல்லது கூடிய தொகையிலோ, எழுதுமட்டுவாள் பகுதியில் தென்னந்தோட்டம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: நா. குமாரசாமி, ஒட்டார்ஸ் லிமிட்டட், யாழ்ப்பாணம். 2424

### தேவை

தச்சுவேலை தெரிந்தவர்:

இயந்திரத்தின் மூலம்தச்சுவேலைசெய்வதில் பயிற்சி பெற்றவர்கள் தேவை. வேணு ஆலை தயாரிப்புகள், 123, ஸ்ரான்லி ரோட், அத்தியடி, யாழ்ப்பாணம்- 2425


## சிரமதானமூலம் வீதி திருத்தம

வல்வெட்டித்துறை, ஞாயிறு

தொண்டமானுறு செட்டியூர் குறிச்சியைச் சேர்ந்த கெருடாவிலில் 1200 அடி நீளமான பிரதான வீதி சிரமதானமூலம் கற்கள் பதித்து செப்பனிடப்பட்டது. இச்சிரமதானம் கெருடாவில் சனசமூக நிலையத்தாரின் ஒத்துழைப்பினுலும் கிராமசேவகர் திரு. பொ. வேலுப்பிள்ளையின் முயற்சியினுலும் செய்துமுடிக்கப்பட்டது.


'கஸ்தூரிமோதகய'




இழந்த வாலிபத்தைத் திரும்பத் தரும் சஞ்சீவி

இளமையிலேயே முதுமை அடைந்தது போன்ற உணர்ச்சி, வாலிபர்களுக்கும் மணமானவர்களுக்கும் ஏற்படும் பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, கனவிலும், மூத்திரத்துடனும் பலஹீனமடைதல், பயம், வெட்கம், வாழ்க்கையில் வெறுப்பு, பற்பல மூத்திராசய வியாதிகள், கை—கால் நடுக்கம், கெட்ட கனவுகள், பசியின்மை ஆகிய வியாதிகளைப் போக்கி, உடல் பலத்தையும் வீரியத்தையும், இளமை உணர்ச்சியையும் திரும்பத்தரும் சஞ்சீவி.

பத்தியம் இல்லை.

விலை ஒரு ருத்தல் ரூ. 15-00
அரை '' ரூ. 8-00
தபால் செலவு வேறு.

N. B.
இத்துடன் ''விட்டால் லேகியம்'' என்ற மருந்தையும் இரவு மட்டும் பாவித்து வந்தால் மலச்சிக்கலை அடியோடு மாற்றுவதுடன், இம் மருந்தின் பலனைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்யும்.

விலை—1/2 ருத்தல் ரூ. 4-75
1/4 ருத்தல் ரூ. 2-50

வடமாகாண ஏஜன்டுகள்:-

எஸ். சுப்பிரமணியம் & கோ,
53, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

க. செ. கைலாசபிள்ளை & சன்ஸ்,
76, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

ஆ. இராசையா & சன்ஸ்,
69, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

தயாரிப்பாளர்கள்:-

எஸ். என். குரு மெடிக்கல் ஹால
80, புதுச்செட்டித் தெரு
கொழும்பு - 13.

கடைசி இரண்டு தினங்கள்!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
விஜயா [மட்டக்களப்பு]
ஸ்ரீ கிருஷ்ணு [திருமலை]
விஜிதா [ஹட்டன்]
மொடேர்ண் [பண்டாரவளை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

ஜெய்சங்கர், ஜெயலலிதா
நாகேஷ், மனோகர்
மாதவி, சகஸ்ரநாமம்,
பண்டரிபாய், ராமதாஸ்
நடிக்கும்

நீ

இசை: விஸ்வநாதன்
[பாலன் ரத்து]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மராஜா மரணம்:

# சந்தேக நபர்கள் தொடர்ந்து றிமாண்டில்

காங்கேசன்துறை, சனி

ரயிலில் மரணமான தர்மராஜாவின் மரணம் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் சங்கானை பொலிசாரால் கைது செய்யப்பட்ட எஸ். சிவஞானம், எஸ்.சிவபாதம் ஆகிய இருவரையும் இன்று மல்லாகம் கோர்ட்டில் மாஜிஸ்டிரேட் நிற்சிங்கா முன்னிலையில் பொலிசார் ஆஜர் செய்தனர்.

புலன் விசாரணைகள் மேற்கொள்வதற்காக கம்பளைக்கு சென்று திரும்பியுள்ள சங்கானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் டயஸ், சந்தேக நபர்கள் மீது கொலைகுற்றம் சுமத்தி வழக்குத் தொடரப்பட விருப்பதாகவும், மரணமானவரின் மனைவியெனக் கருதப்படும் தங்கம்மா இன்னும் கைது செய்யப்படவில்லையென்றும், முழு விசாரணையும் முடிவடையும் வரை சந்தேகநபர்களை றிமாண்டில் வைக்கும்படியும் மாஜிஸ்திரேட்டிடம் கேட்டுக்கொண்டார்.

தர்மராஜாவின் மரண விசாரணையில் வாக்கு மூலம் அளித்த கம்பஹா வைத்திய அதிகாரியின் அறிக்கையையும் சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கையையும் தாம் பார்வையிடவிருப்பதாக மாஜிஸ்திரேட் தெரிவித்தார்.

அதன் பின்னர் சேம்பரில் வைத்து விசாரணை நடத்திய பின்னர் சந்தேக நபர்களை 22-ம் திகதிவரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

# அரசாங்கத்தின் அரைவாசி ஆயுள் முடிந்துவிட்டதாம்

## என். எம். கிண்டல்

கொழும்பு, சனி

'அரசாங்கத்தின் அரைவாசி ஆயுள் முடிந்து விட்டது. அடுத்த அரைவாசி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.' என்று எட்டியாந்தோட்டை எம்.பி.யும், சமசமாஜக் கட்சித் தலைவருமான டாக்டர் என். எம். பெரேரா நேற்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் குத்தலாகப் பேசினார்.

சிம்மாசனப் பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தை எதிர்க்கட்சியின் சார்பில் டாக்டர் பெரேரா ஆரம்பித்து வைத்துப் பேசினார்.

அரசாங்கம் எதிர்க் கட்சியினரின் பத்திரிகைகளை மூடுவதின் மூலமும் வேறு முறைகளிலும் அரசியல் பழிவாங்கிக் கொண்டிருக்கின்றது. பொய் வழக்குகளையும் சிருஷ்டிக்கின்றது. என்று டாக்டர் பெரேரா குற்றஞ் சாட்டினார்.

திரு. ஜே. ஆர். ஜயவர்தன எதிர்க்கட்சியிலிருந்த போது தாங்கள் எல்லாரும் பெரிய அனுபவசாலிகள் என்று பெருமையடித்துக் கொண்டார். ஆனால் இப்போது அரசாங்கம் முறைதவறிய நிர்வாகம் செய்து வருகின்றது. அரசாங்கத்தின் எதிர்கால கொள்கை என்ன என்பதை விளக்குவார்கள் என்றுதான் எதிர்பார்த்தேன் ஆனால் அவர்கள் செய்து முடித்து விட்டதாக பெருமையடிக்கும் பட்டியல் தான் கொடுத்திருக்கிறார்கள். இந்த சிம்மாசனப் பிரசங்கம் வெறும் 'வங்குரோத்து' பிரசங்கம் என்று தான் சொல்ல வேண்டும் என்று டாக்டர் பெரேரா கூறினார்.

உணவுப் பொருட்களின் விலைகள் ஏறிப்போய் இருக்கின்றன. அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காமல் இருக்கின்றன. வாழ்க்கைச் செலவு அதிகரித்திருக்கின்றது. வேலையில்லாத்திண்டாட்டம் பெருகிக்கொண்டிருக்கின்றது. ஆனால் அவை பற்றி எதுவும் விளங்கவில்லை. இந்தப்பிரச்னைகளைத் தீர்க்கமார்க்கம் ஒன்றையும் காணவில்லை. 4 கோடி டாலர் கடன் கிடைக்கப் போவதாகச் சொல்லப்பட்டது. ஆனால் அது வந்து கிடைக்கும்பாட்டைக் காணோம்.

அரசாங்கம் தொழிலாளர்களைத் துன்புறுத்திவருகின்றது. இந்த நிலையில் எதிர்க்கட்சியினருக்கு அரசாங்கத்தின் மீது கொஞ்சமும் நம்பிக்கையில்லை என்று டாக்டர் பெரேரா குறிப்பிட்டார்.

# 'காரில் பத்து கைவிரல் அடையாளங்கள் இருந்தன'

## மண்டைதீவு கொலைவழக்கில் நிபுணர் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''எதிரிகள் சென்றதாக சொல்லப்படும் மோட்டார் காரிலிருந்த கை அடையாளங்களை இவ்வருடம் ஜனவரி மாதம் 22-ம் திகதி நானே பரிசோதனை செய்தேன். சிறந்த கைவிரல் நிபுணர்களிடம் தான் லண்டனில் பயிற்சி பெற்றேன். காரில் 10 கைவிரல் அடையாளங்கள் இருந்தன. அவற்றில் 5 அடையாளங்கள் தெளிவாகவில்லை. மிகுதி 5 அடையாளங்களில் நான்கு அடையாளங்கள் கார்ச் சாரதியான திருநாவுக்கரசுவினுடையன. ஒன்று மாத்திரம் சிவபாலசுந்தரத்தினுடையது.''

மேற்கண்டவாறு நேற்று நடைபெற்ற மண்டைதீவுக் கொலை வழக்கில் சாட்சியமளித்த இலங்கை அரசாங்க கைவிரல் அடையாள நிபுணரான அருணாசலம் சிவசங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் திரு. எம். ஜமீல் முன்னிலையில் நடைபெற்ற இவ்வழக்கில் மண்டைதீவைச் சேர்ந்த சாம்பசிவமூர்த்தியை இவ்வருடம் ஜனவரி மாதம் 20-ம் திகதி கொலை செய்ததாக குலசிங்கம், சிவபாலசுந்தரம், பாலசிங்கம், திருநாவுக்கரசு ஆகிய நால்வர் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

பொலிஸ் புகைப்படப்பிடிப்பாளர் முத்தலிவ், பொலிஸ் சார்ஜன்ட் ஜமிலான், குணரத்தினம் ஆகியோரும் சாட்சியமளித்த பின்னர் மாஜிஸ்டிரேட் மேல்விசாரணையை இம் மாதம் 24-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கையைப்பிடித்து இழுத்தாராம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

படிக்கச்சென்ற இளம் பெண்ணொருவரின் கையைப் பிடித்து இழுத்தாராம் திருமணமான ஓர் ஆடவர். இச் சம்பவம் நேற்று நண்பகல் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கருகாமையில் நடைபெற்றதாகபுகார் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு அருகாமையிலிருக்கும் மேல்மாடிக் கட்டிடம் ஒன்றிலுள்ள தனிப்பட்ட கல்லூரியில் படிப்பவராம் மானிப்பாயைச் சேர்ந்த இளம் பெண்ணொருவர். இவர் நேற்று கல்லூரிக்குச் சென்ற பொழுதே அங்கு கடைவைத்திருக்கும் ஓர் ஆடவர் இவரது கையைப் பிடித்து இழுத்ததாகச் சொல்லப்படுகின்றது. இது சம்பந்தமாக பொலிசார் புலன் விசாரணைசெய்து வருகின்றனர். [ந. நி]

பதுக்கல்

# பால்மா டின்கள் அகப்பட்டன

கொம்பனித்தெரு, சனி

ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான பால்மா டின்கள், உணவுப் பொருட்கள் ஆகியவற்றை கொழும்பிலுள்ள சில வர்த்தக ஸ்தாபனங்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாம். இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

பதுக்கல் மோசடியைக் கண்டுபிடிக்க உணவு இலாகா ஒரு குழுவொன்றைக் கொழும்பில் நியமித்திருந்தது. அந்தக் குழு நேற்றும் இன்றும் நடத்திய வேட்டையின் போதே இப்படியான பதுக்கல்கள் அம்பலத்துக்கு வந்துள்ளதாம்.

நாட்டின் மற்றப் பகுதிகளிலும் இப்படி 'பதுக்கல் வேட்டை'யாடும் குழுக்களை நியமிக்க உணவு இலாகா தீர்மானித்துள்ளது.

# நூறு புதிய அதிபர்கள்

கொம்பனித்தெரு, சனி

இம்மாத இறுதியில் நாடெங்கிலும் நூறு புதிய பாடசாலை அதிபர்கள் நியமிக்கப்படவிருக்கிறார்கள். இப்புதிய அதிபர்கள்நியமனத்துக்காக இப்போது நேர்முகப்பரீட்சைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

# மேலும் 45 முகாம்கள்

கொட்டாஞ்சேனை, ஞாயிறு

இவ் வருடம் முடிவடைவதற்குள் மேலும் 45 விவசாயப்படை முகாம்கள் நிறுவப்படவிருப்பதாகவும், இவற்றில் சுமார் 15,000 பேர் சேர்க்கப்படுவார்கள் எனவும் விவசாயப்படை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கலவீவ, லுணுவீவ, கொரவபொத்தன, கந்தளாய் முதலிய இடங்களில் கடந்த வாரம் விவசாயப்படைமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## மட்டக்களப்பு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளப்புச் சந்தைக்குச் சென்று பார்வையிட்ட திரு. இராசதுரை சந்தையில் உள்ளோர் கூறிய குறைகளைக்கேட்டு அவர்களுக்குள்ள வசதிக் குறைகளை நீக்குவதாக வாக்களித்தார். நகரில் இதுவரை குடிதண்ணீர்விநியோகம் சரியாக நடைபெறுமலிருந்து வந்தது. இப்போது காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று நேரங்களிலும் குடிதண்ணீர் [illegible] இது மட்டக்களப்பு நகர மக்களுக்கு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் அளித்துள்ளது.

யாழ். பெரியாஸ்பத்திரியில்

# 14-ம் வார்டிலும் இனி 'பாஸ்' முறை அமுலாகும்

## ஆஸ்பத்திரி கமிட்டி முடிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் 6-ம்வார்ட்டில்தற்பொழுது இருந்துவரும் 'பாஸ்' முறை அடுத்த மாதம் 1-ம் திகதி முதல் 14-ம் வார்ட்டில் 'ஏ' 'பி' ஆகிய இரு பிரிவுகளிலும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். மேற்கண்ட தீர்மானம் நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. திரு. மு. வைரமுத்து இக்கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

இந்த வார்ட்டுகளில் அதிகமான நோயாளிகள் இருப்பதாலேயே இந்த முறை அனுசரிக்கப்படுவதாக மேற்படி கமிட்டி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். இங்கு போதிய படுக்கைகள் இல்லாததால் அதிகமான நோயாளர்களும் நிலங்களிலேயே படுத்திருப்பதால் பார்வையாளர்கள் அதிகமானவர்களும் வார்ட்டுகளுக்குச் செல்வதால் அங்கு நோயாளர்களுக்கு அசௌகரியமும், டாக்டர்கள் தாதிகளுக்கும் நடமாட்டப் பிரச்னையும் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த முறை கையாளப்படுகின்றது. இப் 'பாஸ்' முறையினால் ஒரு நேரத்தில்ஒரு நோயாளியை இருவர் மட்டுமே பார்க்க முடியும். இதனால் வார்ட்டுகளில் வேலையின்றி சும்மா சுற்றித்திரியும் வாலிபர்களின் வருகையைத் தடைசெய்யலாமெனவும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. 6-ம்வார்ட்டில் பரீட்சார்த்தமாக நடைமுறையிலிருந்த இந்த பாஸ்முறை இனிமேல் நிரந்தரமாக இருந்துவருவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

தற்பொழுது காங்கேசன்துறை ஆஸ்பத்திரியிலிருந்து அதிகமான நோயாளர்களும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுவதால் காங்கேசன்துறைக்கு ஒரு மேலதிக வைத்திய நிபுணரை அனுப்புமாறு சுகாதார அமைச்சிடம் கோருவதாகவும் முடிவுசெய்யப்பட்டது.

ஆஸ்பத்திரி வளவுக்குள் டாக்டர்களையும், நோயாளர்களையும்ஏற்றிக்கொண்டு வரும் மோட்டார் வாகனங்களையும்தவிர வேறெந்த மோட்டார் வாகனங்களை அனுமதிப்பதில்லையெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. [ந. நி.]

# ஆடிவேல் விழா

கொம்பனித்தெரு, ஞாயிறு

இம்மாதம் 19-ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 5 நாட்கள் வரை நடைபெறவிருக்கும் ஆடி வேல் விழாவிற்கான சகலஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன.

கொழும்பு சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி சித்திர ரதம் 19-ம் திகதி புதன்கிழமை காலை 8 மணியளவில் மேற்படி கோவிலிலிருந்து புறப்பட்டு வெள்ளவத்தைக் கோவிலை சென்று அடையும். மறு நாள் விசேஷ பூசை ஆராதனைகளின் பின் 21-ம்திகதி காலை மாணிக்ககங்கை தீர்த்த அபிஷேகமும், 22-ம் திகதி சனிக்கிழமை மாலை சுவாமி ஆஸ்தான மண்டபத்திலிருந்து மாலை 4 மணிக்கு எழுந்தருளலும் நடைபெறும். மறுநாட்காலை முதலாம் குறுக்குத்தெருவில் உள்ள தமது ஆலயத்தை சுவாமி வந்தடைவார். விழா தொடர்ந்து நடைபெறும் ஒவ்வொரு நாளும் வெள்ளவத்தை மாணிக்க விநாயகர் ஆலயத்தில் விசேஷ நாதஸ்வரக் கச்சேரிகளும் மற்றும் இன்னிசைக் கச்சேரிகளும் இடம்பெறும்.

# தூத்துக்குடி துறைமுகம்

## இன்று முடிவு

புதுடில்லி, ஜூலை 16

தூத்துக்குடி துறைமுகம் பற்றி இந்திய மத்திய மந்திரிசபை இன்று முடிவுசெய்யும் எனத் தெரிகிறது.

# வண்டிச்சவாரி

யாழ்ப்பாணம், திங்.

கைதடி மேற்கு ஸ்ரீ சரஸ்வதி வாசகசாலையின் 5வது வருடாந்தவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கின்றது. இவ்விழாவை முன்னிட்டு அன்று மாலை மாட்டுவண்டி சவாரிப் போட்டியொன்றும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# கண்டக்டருக்கு கிறிஸ் குத்து

கொம்பனித்தெரு, ஞாயிறு

நேற்றிரவு கொழும்பு அஞ்சிலாம்படி சந்தியில் பஸ்கண்டக்டர் ஒருவர் கிறிஸ் கத்தியொன்றினால் குத்தப்பட்டு, அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஒரு இனம் தெரியாத கோஷ்டி டபிள் டெக்டர் பஸ்ஸை மறித்து, பாய்ந்து ஏறி கீழ்த்தட்டிலிருந்த கண்டக்டரிடமிருந்து பணத்தையெல்லாம் பறித்து, கிறிஸினால் குத்தியதாக இது பற்றிக் கூறப்படுகிறது.

# 15 மாதம் சிறை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

நயினாதீவைச் சேர்ந்த நாகம்மா என்பவருக்கு அவரது கணவர் மா. கந்தையா என்பவர் 450 ரூபா ஜீவனாம்சப்பணம் கட்டத் தவறிய குற்றத்திற்கு ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ஜமீல் 15 மாதம் சிறைத் தண்டனைவிதித்தார்.

## நாட்டிலும்நகரிலும்

[2-ம் பக்கத்தொடர்ச்சி]

சாங்க சட்டங்களா? இது இன்னொரு கேள்வி,

இப்படி ஆயிரம் கேள்விகள் எழுகின்றன.

அரசாங்க சமங்களும், பாற்சபைகளும் பொதுமக்களின் நன்மைக்காக அரசாங்கத்தால் நிறுவப்பட்ட ஸ்தாபனங்கள். அவை பொதுநன்மை செய்யாமல் விட்டுவிட்டால் போதுமே! பொதுமக்களின்பணத்தையுமல்லவாகரைத்துத்தொலைக்கின்றன.

இங்கே பால் கெடுபிடி இப்படியிருக்க யாழ்ப்பாணத்தில் பால் தேத் தண்ணீரின் விலை திடீரென்று ஏறிவிட்டது. இந்த மர்மம் சூயஸ்கால்வாயில் தங்கியுள்ளதாயின் இலங்கை முழுவதுமே தேநீர்விலை அதிகரிக்கக்கூடும்.

சாக்கடையில் போகும் பாலை மூக்குப்பேணிக்குள் கொண்டுவருவது எப்படி?

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org